## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## MCOP. No.180/2024

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.3 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலஹரிஷ் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் சென்னையில் குடியிருக்கிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். கடந்த 18.02.2024ம் தேதி என்னுடைய காரான TN 14 AA 7468 என்ற Honda Amaze என்ற வாகனத்தில் பெரியகுளத்தில் இருந்து சென்னைக்கு குடும்பத்துடன் நான் ஓட்டுநராக இருந்து வாகனத்தை ஓட்டிக்கொண்டு சென்றுகொண்டிருந்தேன். மாலை சுமார் 04.00 மணியளவில் உளுந்தூர்பேட்டைக்கு முன்பு நான்குவழி சாலையில் சென்று கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த லாரி சிக்னல் செய்யாமல் திரும்பியதால் விபத்து நடந்துவிட்டது. எனக்கு, என்மனைவிக்கு மற்றும் மைத்துனருக்கு லேசான காயம் ஆகும். இதுசம்மந்தமாக உளுந்தூர்பேட்டை காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். இந்த விபத்தில் Aswin நிறுவனத்திற்கு சொந்தமான பொலிரா பிக்கப் வாகனத்தில் ஓட்டுநர் இறந்துவிட்டார். அந்த வாகனம் என்னுடைய வாகனத்திற்கு எதிர்திசையில் சென்னையில் இருந்து திருச்சி நோக்கி வந்துகொண்டிருந்தது. எனக்கு முன்னால் சென்ற சரக்கு லாரி மேற்படி பொலிரோ வாகனத்தில்மோதி

அவர் இறந்துவிட்டார். விபத்துக்கு சிக்னல் செய்யாமல் லாரியை ஓட்டிவந்த லாரி ஓட்டுநர் தான் காரணமாவர். காவல்துறையினர் விபத்து நடந்தவுடன் வந்துவிட்டனர். என்னுடைய வாகனம் HDFC மற்றும் TATA AIG நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. 3ம் தரப்பினரை பொறுத்து நான் காப்பீடு செய்திருந்தேன் மேற்படி இரண்டு நிறுவனங்களில் தற்போது எந்த நிறுவனம் தெரியவில்லை. சாட்சி மேற்படி காப்பீடு பற்றிய விவரம் தன்னுடைய மின்அஞ்சலில் இருப்பதாக தெரிவிக்கிறார். (மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அது எந்த நிறுவனம் என்று தெரிய செல்போன் மூலம் பார்த்து கூற அனுமதி அளிக்கப்பட்டது.) HDFC பாலிசி எண்.2311204734338400000 ஆனது 23.06.2022 முதல் 22.06.2025 வரை 3 ஆண்டுகளுக்கு 3rd Party Policy-யாக எடுத்துள்ளேன். வாகனத்திற்கான சேதத்தை TATA AIG நிறுவனம் வழங்கியது.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

விபத்து நடந்த இடத்தில் வாகனம் திரும்புவதற்கான U-turn இல்லையென்றால் சரிதான். அந்த சாலை நேரான சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் போக்குவரத்து அதிகமாக இருந்தது என்றால் அந்த இடத்தில் அவ்வளவு அதிகமாக இல்லை. நான் சரக்கு லாரிக்கு பின்னால் எவ்வளவு தூரத்தில் பின்னால் வந்தேன் என்றால் சுமார் 50, 100 அடி தூரத்தில் பின்னால் வந்து அதை முந்தி செல்ல எண்ணும் போது விபத்து நடந்தது. விபத்து நடந்த இடத்தில் வாகனம் திரும்ப முடியாது என்றால் சரியல்ல. நான் ஒருவாகனத்தை முந்தும் போது முன்புறம் செல்லும் வாகனம் மற்றும் பக்கவாட்டில் வரும் வாகனங்களை பார்த்து முந்தவேண்டும் என்றால் சரிதான். நான் அவ்வாறு முந்தும்போது முன்னால் சென்ற சரக்குலாரியின் பின்புறம் வேகமாக சென்று மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. Eicher வாகனமானது பெரிய லாரி இல்லையென்றால் சரியல்ல. நான் மேற்படி வாகனத்தின் பின்புறம் மோதியதால் அது நடுக்கட்டையில் ஏறி எதிர்திசைக்கு சென்றுவிட்டது என்றால் சரியல்ல.

நான் மிதமான வேகத்தில் சரியான முறையில் முந்திசென்றிருந்தால் விபத்து நடந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல. எதிர்திசையில் வந்த வாகனத்தில் 3 அட்டை பெட்டிகளில் மது பாட்டில்கள் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்திற்கு நான் தான் காரணம் என்றும், அதை மறைப்பதற்காக சரக்கு லாரி தவறாக திரும்பியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.